சுற்றறிக்கை இல: 01/02

எனது இல:என்ஈபி/சிஓ/பொது-02
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
திருக்கோணமலை.
2002.04.16.

சகல கூட்டுறவுச் சங்கங்களினதும்
தலைவர்களுக்கும்.

## கிராமிய வங்கிக் கடன் வருமதிகளும் ஏனைய வருமதிகளும்

கிராமிய வங்கிகளினூடாக அங்கத்தவர்களுக்கு வழங்கிய கடன்கள் உரிய மீளளிப்புக் காலம் முடிவுற்ற நிலையிலும் நடைமுறைச் சொத்தாக ஐந்தொகையில் காட்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதேபோன்று சுழற்சியற்ற முற்பணங்கள், வருமதிகள் என்பனவும் நடைமுறைச் சொத்தாகவே ஐந்தொகையில் காட்டப்படுகின்றன. இவை தவறான நடைமுறையாக அமைவதுமட்டுமன்றி, பல்வேறு நடைமுறைப் பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றன.

விசேடமாக கடனை மீளளிக்க வேண்டிய காலம் முடிவுற்று பல ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் உரிய சட்ட நடவடிக்கைகளை முறையாக உரிய காலத்தில் மேற்கொள்ளாமையால் தவணை தப்பிய கடனாளி என்ற நிலையிலிருந்து பலர் தப்பித்துக் கொள்ளுகின்றனர்.

மேலும், இத்தகைய நிலையிலிருக்கும் ஒரு சில இயக்குநர்சபை உறுப்பினர்கள் தமக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இந்நிலையிலுள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கு மட்டும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் அவதானிக்க முடிகின்றது.

கடன் மீளளிப்புக் காலம் முடிவுற்று பல ஆண்டுகளின் பின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதால் கடன்தொகைக்கு மேலாக வட்டி கணிக்கப்பட்டு, மேலதிக வட்டியை அறவிடமுடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கமானது அதன் அங்கத்தவர்களுக்கே உரியதாகும். எனவே, கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவரின் நலன்பேணும் நிறுவனமாக செயற்பட வேண்டும். சிக்கனச் சேமிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி அங்கத்தவர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு சங்கத்திற்கு உண்டு.

அங்கத்தவர் தமது சமூக பொருளாதார, கல்வி கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் உருவாக்கிய சங்கமானது, அத்தகைய அங்கத்தவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் நிறுவனமாக செயற்பட வேண்டிய கடமைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

எனவே, முன்கூறப்பட்ட இடர்பாடுகளிலிருந்து விடுபடும் வகையிலும் அங்கத்தவர் நலன்பேணும் வகையிலும் நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டை உறுதிசெய்யும் நோக்கிலும் வருமதிகள் தொடர்பில் பின்வரும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட வேண்டுமென்பதை அறியத்தருகின்றேன்.

சங்கத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு கடனுக்கும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கடன் உடன்படிக்கையும், கடன்முறியும் இருத்தல் வேண்டும். இதில் உரிய கடன் மீளளிப்புச் செய்யும் வழிமுறையும், மீளளிப்புக் காலமும் கடனாளியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

கடனாளி உரிய காலத்தில் கடனை முற்றாகச் செலுத்தி முடிக்காதவிடத்து, கடன் மீளளிப்புக் காலம் முடிவுற்று 3மாத காலத்தினுள் கடனை வட்டியுடன் மீளளிப்புச் செய்யும்படியும் தவறும்பட்சத்தில், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதையும் எழுத்துமூலம் பதிவுத்தபாலில் கடனாளிக்கும், பிணையாட்களுக்கும் 3 தடவைகளாவது அறிவித்தல் வேண்டும்.

உரிய 3மாத காலத்தினுள் கடன் முற்றாக மீளளிக்கப்படாதவிடத்து எதுவித தாமதமுமின்றி நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சகல கடன்கள் தொடர்பாகவும் இந்நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

இவ்வழிமுறையைப் பின்பற்றுவதனூடாக தவணை தப்பிய கடனாளி என்ற நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கோ முதலுக்கு மிஞ்சிய வட்டி தொடர்பான

பிரச்சனைகள் ஏற்படுவதற்கோ இடமேற்பட மாட்டாது. அதுமட்டுமன்றி நீண்ட காலமாக பெருந்தொகையான பணம் வருமதிகளாக ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய நிலையும் அற்றுப்போகும்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே முற்பணம் வழங்கப்பட வேண்டும். முற்பண வருமதியுள்ளவர்களுக்கு மீண்டும் முற்பணம் வழங்கப்படலாகாது. மேலும், உரிய தேவை நிறைவு பெற்றதும் முற்பணக் கணக்குகள் உடனுக்குடன் சீர்செய்யப்படல் வேண்டும்.

முற்பணம் மட்டுமல்லாது, கடன் விற்பனையினூடாக வருமதிகள் அல்லது வேறு சேவைகள் வழங்கிய வகையிலான வருமதிகள் என்பனவும் உடனுக்குடன் அறவிடப்படல் வேண்டும்.

இதுவரை உரிய காலத்தில் அறவிடப்படாத நிலையிலுள்ள முற்பணம் மற்றும் ஏனைய வருமதிகளை உடன் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தவறும்பட்சத்தில் உரிய நபர் அல்லது நிறுவனத்திடம் அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கையில் முற்பணம் வழங்குவதற்கு அல்லது ஏனைய வருமதிகளை ஏற்படுத்துவதற்கு மூலகாரணமாக இருந்த அலுவலர் /பணியாளர்களையும் ஒன்றிணைத்து சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சங்கத்திற்கு ஏற்படுத்திய உரொக்க குறைவு, பொருட் குறைவு, ஏனைய சொத்துக் குறைவு தொடர்பான விடயத்திலும் இவ்வழிமுறை பின்பற்றப்படல் வேண்டும்.

முன்கூறப்பட்ட வழிமுறைகளை பின்பற்றத் தவறும் சங்கத்தின் இயக்குநர் சபைக்கும், முகாமைமட்ட பணியாளர்களுக்கும் எதிராக கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

எனவே, சங்கத்தின் நிதிப் பாதுகாப்பில் கூடிய கவனம் செலுத்தி மேற்கூறப்பட்ட வகையில் செயல்படும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஐ. சுப்பிரமணியசர்மா,
கூ.அ.ஆணையாளரும்
கூ.ச.பதிவாளரும் (வகிமா)

பிரதிகள் : 1. செயலாளர், கூட்டுறவு அமைச்சு (வகிமா) - தகவலுக்கு

2. கூ.அ.உ.ஆணையாளர் - தகவலுக்கு

3. அதிபர். கூட்டுறவு கல்வி நிறுவனம் - தகவலுக்கு